# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் –21 | 03–04–2004 | சனிக்கிழமை | ஓசை –045



S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9294) 077-6059672


# யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி

# அனைத்து ஆசனங்களையும் கைப்பற்றும் வாய்ப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 09ஆசனங்களும் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களுக்கு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும்செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். தேர்தல் மாவட்டத்தின் தபால் மூல தேர்தல் முடிவுகள் ஏற்கனவே வெளியாகியுள்ள அதேவேளையில் யாழ். மாவட்டதெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திலிருந்து வெளியாகும் தகவல்களின்படி தமிழரசுக்கட்சிக்கு அனைத்து ஆசனங்களும் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை உடுப்பிட்டி, மானிப்பாய், சாவகச்சேரி,கிளிநொச்சி,கோப்பாய், ஊர்காவற்றுறை, நல்லூர் ஆகிய தொகுதிகளில் தமிழரசுக்கட்சி முன்னணியில் உள்ளது. இத் தொகுதிகள் அனைத்திலும் பெற்ற மொத்த வாக்குகள் தமிழரசுக்கட்சி- ஒருலட்சத்து 58ஆயிரத்து 238, ஈ.பி.டி.பி 8921, ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு -3845 எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று நடைபெற்ற தேர்தல் தொடர்பானவடக்கு-கிழக்கு மாகாணங்களில் வெளியான தபால் மூலவாக்குகளின் முடிவுகளின்படி தமிழரசுக்கட்சி இரண்டு இடங்களிலும், ஐ.ம.சு.முன்னணி ஓரிடத்திலும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாணம், வவுனியா தேர்தல் மாவட்டங்களிலேயே தமிழரசுக்கட்சி அதிகப்படியான வாக்குகளைப் பெற்றது. திருமலை மாவட்டத்திலேயே ஐ.ம.சு.மு. அதிகப்படியான வாக்குக்களை பெற்றுள்ளது.

(33)

# தென்னிலங்கையில் நிலவும் கடும் போட்டி;

# வெளியான முடிவுகளில் ஐ.ம.சு.மு. முன்னணியில்!

## –தொகுதி வாரியாக ஐ.ம.சு.மு. 3, ஐ.தே.க.2

**நேற்று நடைபெற்ற சிறிலங்கா 13 வது பாராளுமன்றத்திற்கான தேர்தலின் முதலில் வெளியாகிய தொகுதிவாரியான முடிவின் பிரகாரம் அங்கு கடும் போட்டி நிலவுவதாகத் தெரியவருகிறது. முடிவுகள் வெளியாகிய ஐந்து தொகுதிகளில் ஐ.ம.சு.மு. மூன்று இடங்களையும் ஐ.தே.கட்சி இரண்டு இடங்களையும் கைப்பற்றியுள்ளன.**

இதேவேளை, அதிகாலை வரையில் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகள் தொடர்பாக வெளியான அனைத்துத் தபால் மூலவாக்களிப்பின் முடிவுகளின்படி சுதந்திரக்கட்சி-ஜ.வி.பி. கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னணியில் உள்ளது. முதல்தொகுதி வாரியான முடிவாக பதுளை மாவட்டம் ஹாலியெல கிடைக்கப்பெற்றது. இத்தொகுதியை ஐ.தே.கட்சி பெற்றுள்ளது.

கடும் போட்டி நிலவும் எனவும் இத்தரப்பிற்கு அதிகப்படியான

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தல் முடிவு 2004

மாவட்டம்:-பதுளை
தொகுதி - ஹாலிஎல

| கட்சிகள் | வாக்குகள் |
|---|---|
| ஐ.தே.முன்னணி | 19125 |
| ஐ.ம.சுதந்திர முன்னணி | 17926 |
| ஜாதிக ஹெலஉறுமய | 725 |
| லலித் முன்னணி | 81 |
| பதியப்பட்ட மொத்த வாக்கு | 55733 |
| அளிக்கப்பட்ட வாக்கு | 41986 |
| அங்கீகரிக்கப்பட்டது | 38100 |
| நிராகரிக்கப்பட்டது | 3886 |

# ஓமந்தை வரை நடந்துசென்று முல்லை,வவு.வடக்கு மக்கள் வாக்களிப்பு

(அலுவலகச் செய்தியாளர்)

ஓமந்தையில் அமைக்கப் பட்டிருந்தகொத்தணி வாக்க ளிப்பு நிலையத்தில் வாக்களிக்க வென புளியங்குளம் பகுதியில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக் கான மக்கள் ஓமந்தையிலிருந்த பொலிசாரின் தடையையும் தாண்டிக் கொண்டு ஆறு கிலோமீற்றர்கள் தூரம் நடந்து சென்று வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 6.30 மணிக்கு ஓமந்தையில் முல்லைமாவட்ட வாக்காளர்களுக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் விதிகளை மீறியமை தொடர்பாக ஈ.பி.டி.பி.சித்தார்த்தன் குறித்து முறைப்பாடு

ஓமந்தை கொத்தணி வாக்க ளிப்பு நிலையத்திலிருந்து தேர்தல்விதிகளை மீறும் வகையிலான மூன்று முறைப்பாடுகள் பற்றி தம்மிடம் முறையிடப்பட்டிருப்பதாக பவ்ரல்அமைப்பு தேர்தல் கண்காணிப்பாளர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஓமந்தை கொத்தணி வாக்குச்சாவடியில் கண்காணிப்

(8ஆம் பக்கம் பார்க்க)



ஓமந்தை சோதனைச்சாவடியூடாக வாக்களிக்கச்செல்லும் மக்கள்



முகமாலையில் வாக்களிக்கச்செல்லும் மக்கள்

தேர்தல் முடிவுகள் 2004

## பிந்திய செய்தி

இறுதியாக வெளியாகிய ஒன்பது தேர்தல் தொகுதி முடிவுகளில் ஐந்தில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியும் நான்கில் ஐக்கிய தேசியக் கட்சியும் வெற்றி பெற்றுள்ளன.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

க.பொ.த. பரீட்சையில் எமது கல்வி நிலையத்தில் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு

ம.அருளிசா 4A, 3C, 2C
டே.ா.ஜொஸ்டின் A, 6B, C, 2S
சி.ரமணி A, 3B, 3C, 2S
க.மயூரி 2B, 5C, 2S
சி.உமாதேவி B. 5C, 2S

இம்மாணவர்களை பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகிறோம்.

லக்சுமி அக்கடமி,
சுதந்திரபுரம் சந்தி நிர்வாகி,
உடையார்கட்டு ஆசிரியர்கள்,மாணவர்கள் (4415)

## கிளிநொச்சி மருத்துவச் சங்கம் அலுவலக, நூலகதிறப்பு விழாவும் மருத்துவ கருத்துரைகளும்–2004

இடம்:- மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி.

காலம் :- 04.04.2004ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மாலை.2.30 மணி
தலைமை:- வைத்தியகலாநிதி பி.பிறைற்றன் MBBS (Cey)
தலைவர், கிளிநொச்சி மருத்துவ சங்கம்.
நூலகம் திறந்துவைப்பவர் :- வைத்திய கலாநிதி க.சுதாகரன MBBS(Cey)
அலுவலகம் திறந்துவைப்பவர் :- வைத்தியகலாநிதி இ.சுஜந்தன MBBS (Cey)

### மருத்துவ சேவைகள்

1) பொதுவான காது, மூக்கு, தொண்டை நோய்களும் அவற்றிற்கான சிகிச்சைகளும்.
COMMAN E.N.TPROPLEM AND MANAGEMENT
Dr.E.தம்பிராசா MBBS (Cey), DLO Eng, FRCS Ed, FRCS
2) பெண்களில் மாதவிடாய்க்குப்பின்னான ஓமோன் சிகிச்சை முறைகள்.
HORMONE REPLEMENT THERAPAY
Dr. இரட்ணகுமாரி புஸ்பராஜா MBBS (Cey), DRCog

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிளிநொச்சி மருத்துவச் சங்கம்,
கிளிநொச்சி.

விளம்பர அனுசரணை:-
கண்ணன் அரிசி ஆலை
கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி (சி-9425)

## சாவு அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் இல.120 இல் வசித்தவரும் தற்போது இல 51 சிவநகரில் வசித்தவருமாகிய தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம் 31.03.2004 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கமலத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சேதுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சாஸ்திரியார்) கனகம்மாவின் அன்பு மருமகனும், குணதேவி (சிவநகர்), பாஸ்கரன் (இந்தியா), பத்மாதேவி (பிரான்ஸ்), சிவகுமாரன் (சிவா சுவிஸ்), மஞ்சுளா தேவி (சுவிஸ்), பாரதி (சுவிஸ்), குணேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தெய்வேந்திரன் (சிவநகர்), சரவணபவான் (மாணிக்கம் பிரான்ஸ்), சர்வேஸ்வரி(ஈசா சுவிஸ்), ரவிச்சந்திரன (சுவிஸ்), செல்வி(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான தனிநாயகம், கனகரெட்ணம், பொன்னம்பலம், வள்ளியம்மை, அன்னப்பிள்ளை, பொன்னம்மா, ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பேரம்பலம், மகாலிங்கம் (செட்டி), சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், சங்கீதா, பிரபு, கஜீவன், கயனா, சோபிகா, பிரசன்னா, பிரசாத், சகனா, சங்கமன், சாரங்கன், நிகல்சன், சதீஸ்சன், கனீஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.04.2004 அன்று இரவு 10.00 மணிக்கு உருத்திரபுரம் பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-
க.தெய்வேந்திரம்,
(மருமகன்)
இல51, சிவநகர்,
உருத்திரபுரம்.
(4417)

## வரிவிளம்பரம்

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

ஜோண் கல்விநிலையம்
முல்லை வீதி புதுக்குடியிருப்பு 2006 ஆம் ஆண்டுடிற்கான A/L கலை வகுப்புக்களும், O/L மீட்டல் வகுப்புக்களும், A/L விசேட ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. காலம்:- 05.04.2004 திங்கள் பி.ப.3.00 மணி. நிர்வாகி. (4063)

### எட்வின் கல்வி நிலையம்

புதுக்குடியிருப்பு

A/L 2006 ற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. காலம்:- 03.04.2004 இன்று சனிக்கிழமை நேரம்:- பி.ப4.00
* கலை பிரிவு புவியியல் திரு சங்கர், தமிழ் திரு குணபாலன், இந்துநாகரீகம் திரு மங்களேஸ்,
* வர்த்தகப்பிரிவு பொருளியல் திரு சசிகுமார், வணிகக்கல்வி திரு ஜெயராஜா, கணக்கியல் திரு சுதர்சன், O/L மீட்டல் O/L 10ஆம், 9ஆம் தரங்களிற்குமான அனைத்துப்பாடங்களும் ஆரம்பமாகின்றன. (4067)

## மாபெரும் விளையாட்டுப்போட்டி

புது வருடத்தை முன்னிட்டு வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடாத்தும் மாபெரும் விளையாட்டுப்போட்டி

போட்டிகள்:– 1.மரதன்ஓட்டம் ஆண்கள் 15KM
கட்டுப்பணம் 100/=



2.மாட்டுவண்டிச்சவாரிப்போட்டி கட்டுப்பணம்
எருது–A 500 /=
நாம்பன் B 500/=

3.உழவு இயந்திரம் பெட்டி கொழுவுதல் 250/=

இடம்:– மாட்டுவண்டிச்சவாரி 3 ஆம் கட்டை நந்திக்கடல் வெளியில்
மரதன் ஓட்டம் வற்றாப்பளை சந்தி
காலம்:– 13.04.2004 புதுவருடத்தன்று
நேரம்:– மரதன் காலை 6.00
மாட்டு வண்டிச்சவாரி பி.ப 2.00 மணி
விண்ணப்ப முடிவுத்திகதி 12.04.2004
பதிவு மேற்கொள்ளப்படும் இடங்கள்:–
பூங்கண்ணன் தேனீர்ச்சாலை வற்றாப்பளை சந்தி
புனிதன் பல்பொருள் வாணிபம் முள்ளியவளை சந்தையடி
குறிப்பு:– வன்னிப்பெருநிலப்பரப்பில் உள்ள அனைத்துப்போட்டியாளர்களும் பங்கு பற்றலாம். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மங்களேஸ்வரா
விளையாட்டுக்கழகம்
வற்றாப்பளை
(சி.9346)

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"

உ
சிவமயம்
புளியங்பொக்கணை

## நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

## ஆண்டு கணக்கறிக்கை

### கரைச்சி புளியம்பொக்கணை நாக தம்பிரான் ஆலயம்

காசுத் திரட்டு

**காலம்: 01.01.2003 - 31.12.2003**

| வரவு | | செலவு | |
|---|---|---|---|
| ஆரம்ப கையிருப்பு | 18377.25 | பூசைப்பொருள் | 588460.35 |
| நைவேத்தியம் | 430735.00 | உணவுப்பொருள் | 105238.25 |
| திருப்பணி | 610947.00 | திருப்பணி நிர்மாணம் | 503241.50 |
| திருப்பணி வெளிநாடு | 97888.00 | குருதெட்சிணை | 102110.00 |
| அர்ச்சணைப் பொருள்கள் | 534570.00 | வேதனங்கள் | 268500.00 |
| வேளை விபூதி பாம்புபடம்60/= | 407839.00 | மேசன்கூலி | 310260.00 |
| நிலவாடகை | 181025.00 | அர்ச்சணை கூடை | 100000.00 |
| உண்டியல் | 155635:00 | வாகன கூலி | 61807.50 |
| கோழி விற்பனை | 527115.00 | அச்சுப்பிரதி | 95172.00 |
| திருவிழா படித்தளம் | 182046.00 | வேளைத்துணி | 43106.00 |
| அருச்சினை பற்றுச்சீட்டு 05/= | 87765.00 | சோலார் கொள்வனவு | 50185.00 |
| அருச்சினை பற்றுச்சீட்டு 10/= | 59990.00 | ஒலி,ஒளி அமைப்பு | 92300.00 |
| அருச்சினை பற்றுச் சீட்டு 15/= | 780.00 | ஆசாரிக்கூலி | 48230.00 |
| காவடி வாடகை | 12200.00 | எரிபொருள் | 52882.50 |
| காவடி நேர்த்தி | 38350.00 | கூலிகள் | 138608.00 |
| நானாவித வரவு | 30143.00 | மங்கள வாத்தியம் | 54900.00 |
| கொப்பறா விற்பனை | 18000.00 | கோயில் மேளம் | 16200.00 |
| முற்பணம் மீளல் | 25000.00 | பட்டு, வேட்டி | 64606.00 |
| பாற்செம்பு நேத்தி | 9775.00 | சாமி சிலைகள் | 84150.00 |
| வயல் குத்தகை | 6000.00 | தகரப் பந்தல் | 10250.00 |
| | | வரி | 44836.00 |
| | | உபகரணங்கள் | 58528.00 |
| | | மாலை சோடனை | 26750.00 |
| | | நானாவீத செலவு | 29251.00 |
| | | தளபாடங்கள் | 11811.70 |
| | | முற்பணம் | 10000.00 |
| | | மாவீரர் நாள் | 5000.00 |
| | | திருத்தம் | 2325.00 |
| | | மடப்பள்ளி கூலி | 4525.00 |
| | | விளம்பரம் | 20250.20 |
| | | நேர்த்திப்பொருள் | 6250.00 |
| | | போக்குவரத்துச் செலவு | 1008.00 |
| | | காகிதாதி | 3762.00 |
| | | அஸ்ரப்பந்தணம் | 3625.00 |
| | | மில்கூலி | 1713.00 |
| | | விறகுக் கூலி | 14100.00 |
| | | கௌரிகாப்பு நூல் | 4000.00 |
| | | கணக்காய்வு | 7500.00 |
| | | நீர் இறைக்கும்இயந்திரம் | 3600.00 |
| | | கிடுகு | 15100.00 |
| | | உதிரிப்பாகம் | 8142.00 |
| | | வெள்ளை | 5600.00 |
| | | 'சொப்பின்பை' | 4950.00 |
| | | கம்பளம் | 750.00 |
| | | சலவை | 300.00 |
| | | இறுதிக்கையிருப்பு | 350296.25 |
| | 3434180.25 | | 3434130.25 |

நான் அறிந்தமட்டிலும், எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களின் படியும், ஆலய புத்தகங்கள், ஏடுகள், தஸ்தாவேஜ்களின்படியும், மேற்படி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தினது 2003ஆம் ஆண்டிற்கான காசுத்திரட்டு சரியாக வகுக்கப்பட்டுள்ளதென அபிப்பிராயப் படுகிறேன்.

கிளிநொச்சி
15.02.2004

மா.குலவீரசிங்கம்
கணக்காய்வாளர்.

மேற்படி கணக்கறிக்கையை2004.04.04 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆண்டுற்சவப் பொங்கல் தினத்திற்கு முன்பே சகலருக்கும் கிடைக்கவேண்டுமென்ற தீர்மானத்திற்கமைய இதனை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைவதுடன் சகலரினதும் அபிப்பிராயங்களையும் அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

"நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையினர்"
புளியம்பொக்கணை
(சி-9436)

## முறியடிப்பு

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் தீவிரவாதிகளால் நடத்தப்பட இருந்த பாரிய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக பிலிப்பைன்ஸ் அரசு அறிவித்துள்ளது. ஸ்பெயினில் தாக்குதல் நடத்திய குழுவே இத்தாக்குதலையும் நடத்தத்திட்டமிட்டிருந்ததாகவும் பிலிப்பைன்ஸ் அரசு அறிவித்துள்ளது.

# கொள்கலன் போக்குவரத்துக்கு இஸ்ரேல் கட்டுப்பாடு
# காஸா முனையில் நிவாரண விநியோகம் இடைநிறுத்தம்
## -ஆறு இலட்சம் மக்கள் பட்டினி

(ஜெருசலேம்)

**இஸ்ரேலியப்படையினர் விதித்துள்ள புதிய கட்டுப்பாட்டினால் காஸா முனைக்கு உணவு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பலஸ்தீன அகதிகள் ஆறு இலட்சம் பேருக்கான உணவுவிநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.**

காஸா முனைக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் கொள்கலன்களின் போக்குவரத்திற்கு இஸ்ரேல் புதிய கட்டுப்பாடுகளை விதித்ததைத் தொடர்ந்தே பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிவாரண அமைப்பு அந்தப் பகுதிக்கான உணவுப் பொருள் விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளது.

இதனால் காஸா முனையில் வாழும் ஆறு லட்சம் பலஸ்தீன அகதிகளுக்கான அரிசி, மா, எண்ணெய் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இதுகுறித்து பல்வேறு சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

இதேவேளை எட்டு இலட்சம் அகதிகள் வாழும் காஸாவின் மேற்குக் கரையோரப் பகுதியில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க ஐக்கிய நாடுகளின் நிவாரண அமைப்பின் ஆலுநர் நாயகம் பீற்றர் ஹன்சன் கருத்துத் தெரிவிக்கையில்,

இஸ்ரேலின் இந்தப் புதிய கட்டுப்பாடு காரணமாக காஸா முனையில் வாழும் ஆறு இலட்சம் அகதிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இதனால் இவர்கள் அனைவரும் பட்டினியால் வாடும் அவலநிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விநியோகத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்குக் காஸா முனையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பதினோராயிரம் தொன் நிவாரணப் பொருட்களையும் உள்ளே கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் பல்வேறு மட்டங்களிலிருந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இந்தோனேசியாவின் பாராளுமன்றத் தேர்தல்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதையடுத்து தேசியக்கட்சி ஆதரவாளரின் பேரணி.

# 4 ஒப்பந்தக்காரரின் படுகொலைக்கு பழிவாங்கப் போவதாக அமெ.அறிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்காவின் நான்கு ஒப்பந்தக் காரர்கள் மீது கொடூரமான சித்திரவதை செய்து கொன்றமைக்குப் பதில் நடவடிக்கை எடுக்காமல் விடமாட்டோம் என அமெரிக்கா உறுதிபடத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நான்கு ஒப்பந்தக்காரர்களும் கடந்த புதன் கிழமை சுற்றிவளைக்கப்பட்டு பின்னர் சித்திரவதைக்குட்படுத்தி கொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

இதுபற்றி அமெரிக்க பிரதி இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜெனரல் மாக்கின்னிஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த முரட்டுத்தனமான தாக்குதல்களை நடத்தியவர்களை தேடிக் கண்டு பிடிப்பதற்கென விசேடபடையினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று கூறினார்.

இதேவேளை அவர்கள் எப்போது எங்கே நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பது பற்றி எந்த வித தகவலும் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில் ஈராக்கின் ஆளுநர்சபை அங்கத்தவரொருவர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தச் சம்பவத்திற்கு ஈராக்கிய மக்களில் சொற்ப எண்ணிக்கையானவர்களே பின்னணியில் இருந்துள்ளார்கள் எனவும் மக்களில் பெரும்பாலானோர் அமெரிக்க இராணுவத்திற்கு ஆதரவு தெரிவித்தும் வந்துள்ளார்கள் என்று கூறினார்.

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினமும் பலூஜாவில் அமெரிக்க இராணுவத்தினர் சென்ற வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது அமெரிக்க இராணுவத்தைச்சேர்ந்த மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை கடந்த புதன் கிழமை அதே இடத்தில் நடந்த மற்றுமொரு தாக்குதலில் ஐந்து அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக பாக்தாத்தில் வரும் திங்கட்கிழமை நடைபெறவிருந்த 'பாக்தாத் எக்ஸ்போ' என்ற கண்காட்சி பின்தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியின் மூலம் அதிக எண்ணிக்கையான முதலீட்டாளர்களைக் கவர முடியும் என அமெரிக்கா நம்பிக்கை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



தனது பொழுதுபோக்கிற்காக விமான மோட்டும் 68 வயதான ஜேர்மனியர் ஒருவர் தனது விமானத்தை தவறுதலாக பலத்த பாதுகாப்புமிகுந்த அமெரிக்க விமானத்தளத்தில் தரையிறக்கினார்.

# ஆப்கானுக்கு 440 கோடி டொலர் நன்கொடை வழங்க சர்வதேச சமூகம் முடிவு

(காபூல்)

சர்வதேச சமூகம் ஆப்கானிஸ்தானுக்கு 440 கோடி டொலர்களை நன்கொடையாக வழங்க முடிவு செய்துள்ளது.

தமது நாடு போதைப்பொருள் பயங்கரவாதம் என்பவற்றுக்கான சொர்க்கபுரியாக மாறுவதை தடுக்க உதவுமாறு சனாதிபதி கமீஸ் ஹர்சாய் விடுத்த கோரிக்கைகளை அடுத்து இந்த உறுதிமொழி கிடைத்துள்ளது.

ஐம்பதுக்கு மேற்பட்ட நன்கொடை நாடுகள் ஜேர்மனியில் நடத்திய கூட்டத்தில் ஆப்கானிஸ்தான் எதிர்பார்த்ததை விட அதிகமான தொகை தொடர்பான உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுயமாக இயங்கக் கூடிய அரசை ஒன்றை உருவாக்கும் வகையில் நாட்டை கட்டியெழுப்புவதற்காக அடுத்த ஏழாண்டுக்கு, மேற்பட்ட காலப்பகுதியில் 2750 கோடி டொலர்களுக்கும் அதிகமான தொகை தேவை என ஆப்கான் சனாதிபதி கூறியிருந்தார்.

# பொலிவியாவில் குண்டுவெடிப்பு இரு பொலிசார் பலி

பொலிவியாவில் காங்கிரசின் கட்டடத்தினுள் கடந்த செவ்வாய்க் கிழமை குண்டுவெடித்ததில் இரண்டு பொலிசார் உயிரிழந்துள்ளதுடன் 06 பேர் காயமடைந்துள்ளனர்.

காங்கிரசின் அலுவலகமொன்றின் ஊடாக உள்நுழைந்த ஒருவர் குண்டை வெடிக்கச் செய்துள்ளார். இவர் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படாமையை சுட்டிக்காட்டி இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக ராய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.



ஈராக் பலூஜாவில் கடந்த புதன்கிழமை தாக்குதலுக்கு உள்ளான இரு வாகனங்கள் எரிகின்றன. இதில் எட்டு வெளிநாட்டவர் கொல்லப்பட்டனர்.

# காஷ்மீர் பிணக்கு குறித்த தீர்வில் முன்னேற்றமின்றேல் சமாதான நடவடிக்கையிலிருந்து பாக்.விலகும்
## -அதிபர் பர்வேஷ்முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

அடுத்த சில மாதங்களுக்குள் காஷ்மீர் விவகாரம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமென்றும் இல்லாவிடின் இந்தியா-பாகிஸ்தான் தற்காலிக சமாதான நடவடிக்கையிலிருந்து தான் விலகிவிடுவதாகவும் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

இந்திய-பாகிஸ்தான் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக இரு நாடுகளும் வெளிவிவகார அமைச்சர்கள் எதிர்வரும் ஜூலை-ஆகஸ்ட் காலப்பகுதியில் சந்திக்கவுள்ள நிலையில் இக்காலப்பகுதியில் காஷ்மீர் விவகாரம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முன்னேற்றமேற்படுவதைக் காணத் தான் விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அரச தொலைக்காட்சிக்கு புதன்கிழமை வழங்கிய பேட்டியின் போதே முஷாரப் இதனைக் கூறியுள்ளார்.

முஷாரப்பின் பேட்டி குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் காஷ்மீர் தொடர்பாக முன்னேற்றம் ஏற்படாதுவிடின் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவது பாகிஸ்தானுக்கு கடினமாக இருக்கு மென்று கூறியுள்ளார்.

கடந்த ஜனவரியில் சார்க் உச்சி மாநாட்டின் போது இஸ்லாமாபாத்தில் சந்தித்த இந்தியப் பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் காஷ்மீர் விவகாரம் உட்பட இந்திய பாகிஸ்தானுக்கிடையிலான பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சுக்களை நடத்துவதற்கு இணக்கம் கண்டிருந்தனர்.


இதனையடுத்து பேச்சுவார்த்தை தொடர்பான பேச்சுக்களில் கடந்த பெப்ரவரி மாதம் இரு நாடுகளதும் வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் பங்குபற்றியிருந்தனர்.

தொடர்ந்து எதிர்வரும் 'மே' மாதம் அல்லது 'ஜூன்' மாதத்தில் முழுமையான பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்காக இரு நாடுகளதும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்கள் சந்திக்கவுள்ளார்கள்.

இந்தச் சந்திப்பின்போது காஷ்மீர் விவகாரம் அணுவாயுத மற்றும் மரபு ரீதியான போரின் ஆபத்தைக் குறைக்கும் வழிமுறைகள் தொடர்பாக இவர்கள் கலந்துரையாட உள்ளார்கள்.

இதன் பின்னர் பொருளாதார விடயங்கள் உட்பட ஏனைய பல்வேறு விடயங்கள் தொடர்பாக இருநாடுகளது ஏனைய அமைச்சு அதிகாரிகள் ஜூலையில் பேச்சுவார்த்தை நடத்த வுள்ளனர்.

இந்தப் பேச்சுக்கள் அனைத்திலும் எட்டப்பட்ட முன்னேற்றம் தொடர்பாக ஆராய்வதற்காக ஆகஸ்ட் மாதத்தில் இரு நாடுகளது வெளிவிவகார அமைச்சர்கள் சந்திக்கவுள்ளார்கள்.



பிறந்து இரண்டு வாரங்களான யானைக் குட்டியொன்று தாயின் அரவணைப்பில்.

# செயற்கை இரத்தம்

மருத்துவத்துறை ஆரம்பிக்கப்பட்டது முதல் இருந்தே மனிதன் செயற்கைக் குருதியைக் கண்டு பிடிக்க கனவு கண்டான். எனினும் அக்கனவு இது வரை நனவாகாமலேயே இருந்து வந்தது.

அண்மையில் செயற்கைக் குருதியைப் பெறும் ஆய்வுகள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு நாளும் அது கைகூடாமல் இருந்ததற்குக் காரணம் ஆய்வுகளுக்கேற்ற உபகரணங்கள் கண்டுபிடிக்கப்படாமையே. தற்போது அவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் செயற்கைக் குருதி உற்பத்தி செய்தல் சாத்தியமாகும்நிலை யேற்பட்டுள்ளது.

பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டுவந்த ஆய்வுகள் கடந்த இரு வாரங்களுக்கு முன்பு வெற்றியளித்துள்ளன. இதனால் எதிர்காலத்தில் இரத்தப்பற்றாக் குறை ஏற்படும் நிலை குறைக்கப்படுவதோடு அவசர தேவைகளுக்கு இரத்தம் பெறக்கூடியதாகின்றது. அத்துடன் இரத்தம் பெறப்படுவதால் மனிதருக்கு ஏற்படும் பாதிப்பும் தடுக்கப்படுகின்றது. இந்த செயற்கைக்குருதி கண்டுபிடித்தலின் நன்மையானது எந்த ஒரு நோயாளிக்கும் (AB,A,B,O என்ற வர்க்கம் கருதாமல்) இதனைச் செலுத்த முடியும். அத்துடன் இலவசமாகவும் பெறக்கூடியதாகவிருக்கும். அத்துடன் குளிர்சாதனப் பெட்டிகளில் நீண்டநாட்களுக்கு வைத்து பாவனைக்கு எடுக்கலாம். அதனால் விபத்துக்கள் நடைபெறு மிடங்கள், யுத்தப்பிரதேசங்கள் போன்ற கடின பிரதேசங்களுக்கும் எடுத்துச்செல்ல முடியும்.

இதுவரை இவ் ஆய்வுகள் தொடர்பாக நிறுவனங்களுக்கு நிறுவனம் கைவிடப்பட்டு இருந்ததற்கான காரணம் பாதுகாக்கும் பிரச்சினைகளே. இயற்கை இரத்தத்தைவிட சற்று குறைந்த தடிப்புத் தன்மை காணப்படினும் அதற்கு சமமான இடத்தை செயற்கை இரத்தம் பிடித்துள்ளது.

இதற்கு முன்பு பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் இரத்த நாளங்கள் வெடித்தலினாலும் ஒட்சிசன் பெறுதலின் தடைகள் காரணமாக இம்முயற்சிகள் தடைப்பட்டன. எனினும் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இச் செயற்கை இரத்தம் வியத்தகு வகையில் உடலில் சென்று சேர்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதன் உயிரியல், இரசாயனச் செயற்பாடுகள் சரிவர நிகழ்கின்றன. எனினும் கலிபோனியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இதன் கூட்டுப்பொருள் பற்றி கேள்வி எழுப்புகின்றனர். இதன் கனத்தை சரியான நிலைக்குக் கொண்டுவர மேலும் ஆய்வுகளை நடத்துகின்றனர். அந்த ஆய்வுகளும் வெற்றியளிப்பனவாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. விலைமதிக்க முடியாத மனித இரத்தத்துக்கும், செயற்கை இரத்தத்துக்கும் இடையில் வேறுபாடுகளும் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றது.

# மொழிபெயர்ப்புக்கருவி



ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் உல்லாசப் பயணிகளின் நன்மை கருதி சொனி நிறுவனம் புதிதாக மொழி பெயர்ப்புக் கருவியைத் தயாரித்துள்ளது. இந்தக்கருவி ஐரோப்பிய ஆங்கில மொழிகளில் எந்த மொழியில் வேண்டுமானாலும் அந்த மொழியை மொழி பெயர்த்துக் காட்டும். அத்துடன் உச்சரித்துக் காட்டும் திறனுடையது. இதன்விலை 5000ரூபா ஆகும்.

# நாடுகளும் பாராளுமன்றங்களும்

| நாடு | பாராளுமன்றம் |
|---|---|
| அயர்லாந்து | டெப்ல் |
| அமெரிக்கா | காங்கிரஸ் |
| ஆப்கானிஸ்தான் | ஷோரா |
| ஆஸ்திரியா | பெடரல்அசெம்பிளி |
| அவுஸ்ரேலியா | பெடால் பாராளுமன்றம் |
| இங்கிலாந்து | பிரபுக்கள் சபை(மக்கள் சபை) |
| இந்தியா | லோக்சபா, ராஜ்யசபா |
| ஈரான் | மஜ்ஜீலிஸ் |
| இஸ்ரேல் | நெசட் |
| ஐஸ்லாந்து | அல்திங்க் |
| கனடா | மக்கள்சபை (செனட்) |
| சீனா | தேசிய மக்கள் காங்கிறஸ் |
| சுவிட்சர்லாந்து | பெடரல்அசெம்பிளி |
| சுவீடன் | ரிக்ஸ்டாக் |
| டென்மார்க் | போல் கெட்டிஸ் |
| தென்னாபிரிக்கா | கவுஸ் ஒப் அசெம்பிளி |
| துருக்கி | கிராண்ட் நஷனல் அசெம்பளி |
| நோர்வே | ஸ்டோர்டிங் |
| நியூசிலாந்து | பிரதிநிதிசபை |
| நெதர்லாந்து | த.ஸ்டேட்ஸ் ஜெனரல் |
| நேபாளம் | தேசிய பஞ்சாயத்து |
| பூட்டான் | சாங்டு |
| போலந்து | சீஜிம் |
| மலேசியா | தேவான் ரக்யத்மற்றும் நெகாரா |
| மியன்மார் | பெய்துஹிட்டாங் (மக்கள் மன்றம்) |
| ருமேனியா | த கிராண்ட் நஷனல் அசெம்பிளி |
| ரஷ்யா | சுப்ரீம் சோவித் |
| லிபியா | பொதுமக்கள் காங்கிரஸ் |
| ஸ்பெயின் | கோர்டஸ் |
| ஜப்பான் | டயட் |
| ஜேர்மனி | புண்டஸ்ராட் (மேல்சபை) |

# பூமியின் வெப்பநிலை மாற்றத்தால் பூமியை பனி மூடலாம்

நீராவியுடன் காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் கலப்பதால் ஏற்படும் விளைவு காரணமாக புவியின் வெப்பம் அதிகரிப்பதாகவும் அதனால் எதிர்காலத்தில் பனியுகம் ஒன்று உருவாகும் எனவும் அமெரிக்க விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

புவியில் நிலவும் அதிக எரிபொருள் பாவனையாலும் காடுகள் எரிக்கப்படுவதாலும் மனிதனால் சூழலுக்குஏற்படும் தாக்கத்தினாலும் சூழலில் வேகமாக வெப்பம் அதிகரிக்கின்றது. மிகவும் குளிரான யுகம் ஒன்று ஏற்படுவதற்கு முன்பாக புவியின் வெப்பம் அதிகரிக்கின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு தற்போது புவியில் ஏற்பட்டுள்ள வெப்பத்துக்குப்பின் கடுங் குளிர்காலம் ஒன்று ஏற்படும் என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும்.

பலகோடி வருடங்களுக்கு முன்பு நாம் வாழும் பூமி பல்வேறு பனிக்கோள யுகங்களைக் கடந்து வந்துள்ளது. இவ்வாறு குளிர்யுகம் ஒன்று ஏற்படுவது குறுகிய காலப்பகுதியிலேயே.

இவ்வாறு க[illegible]ிரும் கடும் வெப்பமும் சுழற்சிமுறையில் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஒவ்வொரு 10 ஆயிரம், 23ஆயிரம், 41ஆயிரம் வருடங்களுக்குப் பின்பு புவியில் பனியுகம் ஒன்று ஏற்படும் என்பதும் விஞ்ஞானிகளின் கருத்தாகும்.

அதன்படி இதற்கு முன்பு பனியுகம் ஏற்பட்டது 11ஆயிரம் வருடங்களுக்கு முன்பாகவும் அக்காலம் நீங்கியது இற்றைக்கு 7ஆயிரம் வருடங்களுக்கு முன்பே என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆகவே அடுத்த பனியுகம் இன்னும் 2ஆயிரம் வருடங்களில் அதாவது கி.பி 4,000 ஆண்டளவில் தோன்றலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தற்போது புவி வெப்பமடைந்து வருகின்றமை நோக்கத்தக்கது. மேற்கூறப்பட்ட நிகழ்வுகளை நோக்கும்போது பாரிய பனிமலைகளினால் பூமி மூடப்படுவதற்கு இன்னும் 2ஆயிரம் வருடங்கள் கூட செல்லாது. அதனாலேயே புவியியல் ஆய்வுகளின் மூலம் அடுத்த பனியுகம் கைமேல் உள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதனால் மனித தாவர உயிரினங்களின் தலைவிதி எவ்வாறு இருக்கும் என்பதை அறியவோ அதனைத்தடுக்கவோ முடியாது.

# உயிர்காப்பு உடை



பனிமலையிலிருந்து பரசூட் மூலம் குதித்தல், மலையேறுதல், தீயணைப்பு நடவடிக்கை போன்றவற்றின் போது ஆபத்துக்கள் ஏற்படும். இதனைத் தவிர்ப்பதற்காக புதியவகை உடையொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த உடையை அணிந்து கொள்வதால் ஆபத்துக்கள் மிகவும் அதிகமாக தவிர்க்கப்படுகின்றது. இந்த உடை உடலுக்கு வெப்பத்தையும் கொடுக்கக் கூடியது எடையும் மிகக் குறைவானது.



சமீபத்தில் சுவிஸ்லாந்து புதிய கார் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக்கார் மணிக்கு 320 கி.மீ வேகத்தில் செல்லக்கூடியது. அதுமட்டுமன்றி இந்தக்காரில் உணவுஉண்பதற்கான சகல வசதிகளும், நித்திரை செய்வதற்கான வசதிகளும் உள்ளது.

# மணிக்கு 320 கி.மீ செல்லக்கூடிய கார்

# மாரடைப்பு பற்றி

மாரடைப்பு எந்த நேரத்திலும் ஏற்படக் கூடிய நோயாகும். ஆனால் இரவில் மாரடைப்பு வந்தவர்களையும் பார்க்க பகலில் மாரடைப்பு வந்தவர்கள் உயிர்பிழைக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக ஆய்வறிக்கை ஒன்று கூறியுள்ளது.

நெதர்லாந்தில் 1700 நோயாளிகளை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் இதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிவிக்கவில்லை.

பகல் நேரத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களிலும் பார்க்க மாலை 6 மணிமுதல் அடுத்தநாள் மாலை 8 மணிவரை அனுமதிக்கப்பட்டவர்கள் இரண்டு மடங்கு எண்ணிக்கையில் பலியாகியிருப்பது தெரியவந்துள்ளது. இதற்கு என்ன காரணம் என்று இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

அழுத்தம் அல்லதுஹோர்மோனின் அளவு இரவில் அதிகரித்துக் காணப்படுவது காரணமாக இருக்கலாம் என்றும் அல்லது பகல் முழுவதும் வேலைப்பளுவில் ஈடுபடும் மருத்துவர்கள் கவனக்குறைவாக ஈடுபடுவதும் காரணமாக இருக்க முடியும் என்றும் அவ்வறிக்கை கூறியுள்ளது.

# கையடக்க தட்டச்சு இயந்திரம்

தமிழ் தட்டெழுத்து இயந்திரம் உள்ளங்கையினுள் மடக்கி எடுத்துச் செல்லக்கூடிய அளவில் மிகச்சிறியதாக தயாரிக்கப்பட்டுள்ளது.இதனை தென் இந்தியா விழுப்புரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் துரை ஜெயராமன் வடிவமைத்துள்ளார்.

தமிழ் தட்டெழுத்து இயந்திரத்தை மிகச்சிறியளவில் வடிவமைத்ததுடன் மட்டுமன்றி 247 தமிழ் எழுத்துக்களையும் தனக்கே உரிய வாய்ப்பாட்டு முறையில் 07 எழுத்துக்களாக குறைந்துள்ளார் ஜெயராமன்.

அந்த வகையில் தமிழில் 07 எழுத்துக்களுடன் கையடக்க தட்டச்சு இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.247 எழுத்துக்களை 07எழுத்துக்கள் ஆக்குவதற்கு ஜெயராமன் பயன்படுத்தியிருக்கும் குறியீடுகள் ஆங்கில எழுத்துக்களின் சாயலிலும், ஜப்பான் எழுத்துக்களின் சாயலிலும் காணப்படுகின்றது. இந்த 07வித குறியீடுகளுக்குள்ளும் தமிழின் 247 எழுத்துக்களும் உள்ளடக்கப்பட்டு இருப்பதுதான் இந்தக் கண்டுபிடிப்பின் சிறப்பம்சம் ஆகும்.

# மீனவர்களுக்கான நட்டஈட்டை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம் கோரிக்கை

**யாழ்.மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்படாத நட்டஈட்டுத் தொகையை உடனடியாகவே வழங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.**

மீனவக் குடும்பங்களுக்கு இயற்கை அனர்த்தங்கள் மற்றும் போர் அனர்த்தங்களால் காலத்திற்குக் காலம் ஏற்படும் இழப்புக்களுக்கு அரசினால் நட்டஈடு வழங்கப்படவேண்டும்.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் மீனவர்கள் போரினாலும், இயற்கையாலும் கோடிக்கணக்கான சொத்துக்களையும், பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழ்ந்திருக்கின்றனர். எனினும் இவ்வாறான இழப்புகளுக்கான நட்டஈடுகள் 1983ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இதனால் யாழ்மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டி மேற்படி சம்மேளனம் இக்கோரிக்கையை யாழ்.அரசாங்க அதிபரிடம் விடுத்துள்ளது. (33)

# நவீன வசதிகொண்ட வடிசாலை ஆனைக்கோட்டையில் அமைக்க ஏற்பாடு

யாழ்.ஆனைக்கோட்டைப் பகுதியில் நவீன வசதிகள் கொண்ட வடிசாலை ஒன்றை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

15கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இவ்வடிசாலையை நிறுவுவதற்குரிய முன்னேற்பாடுகளில் வலிகாமம் பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி மேற்கொண்டுவருகின்றது.

இவ்வடிசாலையில் தரம் வாய்ந்த வடிசாராயங்களை உற்பத்தி செய்வதற்கான நவீன இயந்திரங்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது.

ஏற்றுமதிக்கு தகுந்த தரமான சாராய வகைகள் உற்பத்தி செய்யப்படவுள்ள இவ்வடிசாலையில் பல நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்பினைப் பெறுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (33)

# முன்பள்ளிக்கு த.பு.கழகம் கதிரைகள் அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

அக்கராயன் வைகறை முன்பள்ளிக்கென தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினரால் கதிரைகள் அன்பளிப்புச் செய்யப் பெற்றுள்ளது.

முன்பள்ளிச் சிறார்களின் பாவனைக்கென தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினரால் 60 கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பெற்றுள்ளதென த.பு.க குறிப்பேட்டின்மூலம் தெரியவந்துள்ளது.

தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினரால் வைகறை முன்பள்ளி அண்மையில் ஆரம்பித்து வைக்கப் பெற்றமைகுறிப்பிடத்தக்கது. (சோ)

# கடந்தகால வன்செயலால் 219 சிறுவர்கள் உடல்,உள ரீதியாக பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்செயல் காரணமாக உடல் உள ரீதியாக 219 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.இவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக புனர்வாழ்வு மையங்களை அமைப்பதற்கு 'யுனிசெவ்' நிறுவனம் நிதியுதவி செய்ய முன்வந்துள்ளது. (மி)

# மட்டு.வாக்குச் சாவடிகளுக்கு கண்காணிப்புக்குழு நேரில் சென்றது

(வவுணதீவு)

மட்டக்களப்பில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினரும் 'பவ்ரல்' அமைப்பினரும் தேர்தல் நடை பெறும் வாக்குச்சாவடிகளுக்கு நேரில் சென்று அவதானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளர்களுக்காக அமைக்கப்பட்ட கொத்தணி வாக்குச் சாவடிகளையும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் வவுணதீவு கொத்தணி வாக்குச் சாவடிக்கு ஐரோப்பிய ஒன்றியக் கண் காணிப்புக் குழுப்பிரதிநிதிகள் நேற்றுக்காலை பத்துமணியளவில் சென்று நிலைமைகளை அவதானித்துள்ளனர்.

தமது கண்காணிப்புத் தொடர்பாக அவர்கள் ஊடகம் ஒன்றிற்குத் தெரிவிக்கையில், பாரதூரமான சம்பவம் எதுவும் நடை பெறவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

# முன்னேற்பாட்டு நடவடிக்கையாக நேற்று இரவு ஊரடங்குச்சட்டம் அமுல்

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று முடிவடைந்துள்ள போதும், வாக்குப் பெட்டிகள் வாக்கு கணக்கெடுப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவென்று நேற்று இரவு 10மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்த பாதுகாப்பு கவுன்சில் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இன்று சனிக்கிழமை நிலைமையை அவதானித்து பின்னர் ஊரடங்கு நீடிப்பதா அல்லது கைவிடுவதா என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஊரடங்குச் சட்டம் குறித்து அச்சம் கொண்டுள்ள பொதுமக்கள் அத்தியாவசிய உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்வதில் பெரும் அக்கறை செலுத்திவருகின்றனர். இதனால் சந்தையில் உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. ஒருKg சீனியின் விலை 45ரூபாவரை உயர்ந்துள்ளது. பருப்பு, கிழங்கு, காய்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. சீனியின் இறக்குமதித் தீர்வை ஐந்து ரூபாவால் குறைக்கப்பட்ட போதிலும் சீனியின் விலை இன்னும் குறைவடையாமை குறித்து நுகர்வோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

# வீதிகள் புனரமைக்கப்படாதது குறித்து யாழ்.பொதுஅமைப்புக்கள் விசனம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவில்லையென பல்வேறு மக்கள் அமைப்புக்களாலும் குற்றஞ்சாட்டப்பட்டுவருகிறது.

யாழ்ப்பாணத்தில் முக்கியமான பலவீதிகள் கிளைவீதிகள் என்பன நீண்டகாலமாக செப்பனிட்டு தார் ஊற்றப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் பயணிகள் பல்வேறு அவஸ்தைகளையும் அனுபவித்து வருகின்றனர்.

இவற்றை சுட்டிக்காட்டும் மக்கள் அமைப்புக்கள் மாநகரசபை மற்றும் பிரதேசசபை ஆகியவற்றிடம் முறையிட்டுள்ளன.

நிதிப்பற்றாக்குறை, வளப் பற்றாக்குறை என்பவற்றைக்காரணம் காட்டி கோரிக்கைகள் நிராகரிக்கபடுவதாகவும் மக்கள் அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன. இதேவேளை இவ்வாறான வீதிச்சீரின்மை காரணமாக தவிர்க்கமுடியாத விபத்துக்களும் வீண் இழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (33)

# திருகோணமலை செயலக சூழல் தன்னை ஈர்த்துள்ளதென்கிறார் குஷ்நகன்

"திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் அமர்ந்து அரச அதிபராகக் கடமையாற்ற விரும்புகின்றேன். காரணம் அவ்வாறு எண்ணும் அளவிற்கு திருகோணமலை மாவட்டச் செயலகம் அமைந்துள்ள இடத்தின் வனப்பு என்னை ஈர்த்துள்ளது"

இவ்வாறு ஐரோப்பிய யூனியன் தேர்தல் அவதானிப்புக் குழுவின் பிரதம அவதானி ஜோன்குஷ்நகன் கூறியுள்ளார்.

குஷ்நகன் ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். இவர் ஐரோப்பிய மக்கள் கட்சி மற்றும் ஐரோப்பிய ஜனநாயகவாதிகள் குழு வெளிநாட்டலுவல்கள், மனித உரிமை, பொதுப்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்குழு தெற்காசிய நாடுகள் மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்புடனான(சார்க்) உறவுகளுக்கான தூதுக்குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் பணிபுரிகின்றார்.

# நாடு முழுவதும் தேர்தல் கண்காணிப்புப் பணியில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் 92 பேர்

(கொழும்பு)

இன்று நடைபெறும் இலங்கையின் பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் 92பேர் ஈடுபடவுள்ளதாக தேர்தலை கண்காணிக்கும் 'பெவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்கள் ஐரோப்பிய ஒன்றியம், நேபாளம், பங்களாதேஷ், யப்பான நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளது. இவர்களில் வடக்கு கிழக்கு பகுதிக்கு அனுபவம் வாய்ந்தவர்கள் அனுப்பட்டுள்ளதாகவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஏனெனில் அங்கு சுயாதீனமான தேர்தலை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள மக்கள் வாக்களிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் அங்கு அனுபவம் வாய்ந்த கண்காணிப் பாளர்களை அனுப்ப வேண்டிய அவசியம் இருப்பதாகவும் மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது.

மேற்படி சர்வதேச கண் காணிப்பாளர்களில் யாழ் மாவட்டத்துக்கு 8பேரும், வவுனியா வுக்கு 4பேரும், திருமலைக்கு 6பேரும், மட்டக்களப்புக்கு 7பேரும், அம்பாறைக்கு 4பேரும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அதன் முகாமைப் பணிப்பாளர் கிங்சிலி றொட்ரிகோ தெரிவித்துள்ளார். (32)

# யாழ்.தபால் நிலையங்கள் பலவற்றில் தொலைபேசி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல தபால் நிலையங்கள் தொலைபேசி வசதிகள் அற்று இயங்கி வருகின்றன்றது. இதனால் மக்களுக்குரிய துரித சேவைகளை வழங்கமுடியாதுள்ளதாக அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் ஒரு பிரதம தலைமைத்தபாலகமும், 24முதலாம் தரத்தபாலகங்களும், 26 இரண்டாம் தரத்தபாலகங்களும், 147 உபதபாலகங்களும் இயங்கி வருகின்றபோதும் இவற்றுள் சிலவற்றுக்கு மட்டுமே தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.


இதனால் பெரும்பாலான தபால் நிலையங்கள் தொலைபேசி வசதிகள் அற்று இயங்கி வருவதால் மக்களுக்குரிய துரித சேவையை வழங்கமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு யாழ் மாவட்டத் தபால் நிலையங்களுக்கான தொலைபேசி இணைப்புக்களை மேற்கொள்வதற்குரிய நிதிவசதிகள் உரிய தபால் தொலைத் தொடர்பு அமைச்சினால் வழங்கப்படாததே காரணம் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (33)

# திருத்தப்படாத நிலையிலுள்ள மூன்று பாலங்கள்

கண்டாவளை சந்திக்கும் புளியம்பொக்கணை சந்திக்கும் இடையில் உள்ள மூன்று பாலங்கள் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது.

அதிக வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறும் பரந்தன் முல்லை சாலையில் அமைந்துள்ள மேற்படி பாலங்கள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாதநிலையில் பாலங்களின் நடுவில் பாரிய ஓட்டைகள் ஏற்பட்டும் பெரும் வெடிப்புகள் ஏற்பட்டும் மோசமாக சிதைவடைந்து உடைந்து விழும் அபாய நிலையில் உள்ளது. இந்நிலையில் இப்பாலத்தின் ஊடான போக்குவரத்து அபாய நிலையிலேயே உள்ளது. அண்மைக்காலத்தில் குறித்த வீதி செப்பனிடப்பட்டுள்ள போதிலும் இப்பாலங்கள் புனரமைக்கப்படாதிருப்பது கவலை தருவதாக உள்ளது. எனவே இப்பாலங்களை வெகுவிரைவில் புனரமைத்து பயணிகளின் அபாயம் நிறைந்த போக்குவரத்து விரைவில் நீக்கப்பட உரியவர்கள் நடவடிக்கை எடுத்து விரைவில் குறித்த பாலங்களை புனரமைக்கவேண்டும் எனவும்பயணிகள் • தெரிவித்துள்ளனர். (லோபி)



# வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தினரும், மல்ரிபிளெக்ஸ் கம்பனியும் இணைந்து நடாத்தும் விவசாய உள்ளீடுகள் பற்றிய கருத்தூட்டல் நிகழ்வுக்கான கால அட்டவணை

உயர் விளைவுக்கும், சூழல் மாசடையாதிருக்கவும் உடல் நலத்துக்கான உணவு உற்பத்தியைப் பெறவும் அவசியம் பாவிக்கவேண்டியவைதான் "மல்ரிபிளெக்ஸ்" நுண்ணூட்டச்சத்துள்ள பசளை, நுண்மூலக மருந்துக்கள்.

வேளாண் செய்கையில் ஒரு புரட்சிகரமான மாற்றம் தான் "மல்ரிபிளெக்ஸ்" பசளை, மருந்துப்பாவனை, இது தொடர்பானகருத்தூட்டல் நிகழ்வு கீழ்க்குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறவுள்ளது. கர்நாடக மாநில "மல்ரிபிளெக்ஸ்" கம்பனியின் விவசாய விஞ்ஞானிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். இப்பயன்தரு கருத்தூட்டல் நிகழ்வில் அனைத்து வேளாண் செய்கையாளர்களும் கலந்து எம்தேச பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுமாறு அன்புடன்அழைக்கின்றனர்.

## வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்

கண்டிச்சாலை கிளிநொச்சி.

| நாள் | நேரம் | பிரதேசங்கள் | இடம் |
|---|---|---|---|
| 06.04.2004 | மு.ப 11.30 - 2.00 | கிளிநகர்1,2,3,4,5,6,ம் வாய்க்கால். உருத்திரபுரம். | கிளிமகாவித்தியாலயம் |
| 06.04.2004 | பி.ப 3.00 - 5.00 | வட்டக்கச்சி, இராமநாதபுரம். | இராமநாதபுரம் மேற்கு அ.த.பாடசாலை |
| 06.04.2004 | பி.ப 6.00 - 8.00 | முரசுமோட்டை, தருமபுரம், கண்டாவளை, புளியம்பொக்கணை. | முரசுமோட்டை முருகானந்தா ம.வி |
| 07.04.2004 | மு.ப 8.30 -11.30 | தண்ணீரூற்று, முள்ளியவளை, குமுழமுனை, அளம்பில். | குமுழமுனை மகாவித்தியாலயம். |
| 07.04.2004 | பி.ப 1.00 - 2.30 | நெடுங்கேணி. | நெடுங்கேணி மகாவித்தியாலயம் |
| 07.04.2004 | பி.ப 3.00 - 5.00 | ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு. | கற்சிலைமடு அ.த.க.பாடசாலை. |
| 07.04.2004 | பி.ப 6.00 - 8.00 | உடையார்கட்டு, விசுவமடு, பிரமந்தனாறு. | விசுவமடு மகாவித்தியாலயம். |
| 08.04.2004 | காலை 7.00 - 9.00 | அக்கராயன், கோணாவில், ஸ்கந்தபுரம், வன்னேரி. | ஸ்கந்தபுரம் 1வது பாடசாலை. |
| 08.04.2004 | பி.ப 10.00 - 12.00 | பாண்டியன்குளம், துனுக்காய், வவுனிக்குளம். | யோகபுரம் மகாவித்தியாலயம் |
| 08.04.2004 | பி.ப 1.00 - 2.30 | முழங்காவில், பல்லவராயன்கட்டு. | முழங்காவில் மகாவித்தியாலயம். |
| 08.04.2004 | பி.ப 3.00 - 5.00 | ஆண்டான்குளம், இலுப்பைக்கடவை, பெரியமடு. | ஆண்டான்குளம் மகாவித்தியாலயம். |



THE VANNI AGROTECHS

multiplex®

MULTIMICRONUTRIENTS FERTILIZER



## சிந்தனைக்கு

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவைபுரியும் பணி; மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 03 -04-2004


## பொறுப்பு கருணா மட்டுமல்ல!

மட்டக்களப்பில் கருணாவின் கும்பல் வடபகுதி மக்களுக்கு எதிராகத் தனது அடாவடித்தனத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. அங்குள்ள வடபகுதிமக்களின் வர்த்தகநிலையங்கள், தொழில் கூடங்களை மூடி அவற்றின் திறப்புக்களை பறித்ததோடு அம்மக்களை அவர்களின் சொந்த வீடுகளில் இருந்து வெறுங்கையுடன் துரத்தியடித்துள்ளது. அவர்களின் வாகனங்களையும் பறித்தெடுத்துள்ளது.

கருணாகுழு பிரதேசவாதத்தினைக் கையில் எடுத்தபோதே இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சாத்தியப்பாடுகள் உருவாகக்கூடும் என எதிர்பார்ப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கவே செய்தன. ஏனெனில் ஆரம்பம் முதலே கருணா குழு வடபகுதி மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியிருந்தது.

கருணா குழுவின் இந்நடவடிக்கையானது மட்டு.மக்களின் நடவடிக்கையாகவோ மட்டு.மக்கள் பிரதேசவாதத்திற்கு உட்பட்டு செயற்படுவதாகவோ கொள்ளத்தக்கதல்ல என்பது சந்தேகத்திற்கிடமற்றதொன்று. ஆகையினால் வடபகுதி மக்களுக்கும், மட்டு–அம்பாறை தமிழ் மக்களுக்கும் இடையில் பிணக்குகள், முரண்பாடுகள் இல்லாத நிலையில் கருணாவின் செயற்பாடுகள் தமிழர் தாயகத்திற்கோ தேசியத்திற்கோ ஊறுவிளைவிக்கப்போவதில்லை.

ஆனால், தற்பொழுது கருணாவின் செயற்பாட்டிற்கு சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பில் இருந்து வழங்கப்படும் உதவியானது பிரதேச வாதத்தினைத் தூண்டும் நோக்கிலானதாக மட்டும் அமையாது, சமாதான முயற்சிகளுக்கும், யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கும் ஊறுவிளைவிப்பதாக அமையும் என உறுதிபடக் கூறமுடியும்.

அதாவது வடபகுதி மக்களை கருணா குழுவே வெளியேறுமாறு கோரிக்கை விடுத்துள்ளதாயினும் அவற்றை நடைமுறைப்படுத்தல் என்பது சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு மற்றும் பொலிஸ்தரப்பின் ஒத்துழைப்பு இன்றிமேற்கொள்ளப்படத்தக்க தொன்றல்ல.

ஏனெனில் கருணா இன்று வெளியேறுமாறு பணித்துள்ள வடபகுதி மக்கள் பெரும்பாலும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இருந்தவர்கள். இவர்களின் தொழில் நிறுவனங்களும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இருக்கின்றன. ஆகையினால் இவர்களை வெளியேற்ற கருணாகுழு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஆயுதப்படைத்தரப்பின் ஒத்துழைப்பு இன்றி எதுவும் நடைபெறவாய்ப்பில்லை. இவ் ஒத்துழைப்பிற்கு ஆதா[illegible]களும் இல்லாமல் இல்லை.

எடுத்துக்காட்டாக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வடபகுதி மக்களுக்கான எச்சரிக்கை ஒலிபெருக்கி மூலமே விடுக்கப்பட்டுள்ளது. இது இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் எந்தவகையில் சாத்தியமானது. அதாவது இராணுவத்தினரோ, பொலிசாரினதோ அனுமதியின்றி எவ்வாறு ஒலிபெருக்கியைப் பாவிக்கவும், ஒரு தொகுதிமக்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யவும் முடியும்?

மேலும், பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள், மற்றும் உடமைகள்யாவும் கருணாகுழுவினர் பாவனைக்கு உட்படுத்துவதாகவும் அபகரித்த வீடுகளை அவர்கள் பயன்படுத்திவருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறு இடம்பெறுமானால் இராணுவக்கட்டுப்பாட்டில் இத்தகைய சம்பவங்கள் எவ்வாறு இராணுவத்தின் ஒத்துழைப்பின்றி சாத்தியமானதொன்றாக இருக்கமுடியும்?

கருணாவின் பிரதேசவாதத்தை சிங்கள அரசியற்கட்சிகளும் பேரினவாத சக்திகளும் பயன்படுத்திக் கொள்ள முற்படுவது ஒன்றும் ஆச்சரியம் இல்லைத்தான். இதில் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி ரணில் விக்கிரமசிங்கவோ கூட பின் நிற்கப்போவதில்லை. ஆனால் தற்பொழுது கருணாவின் பின்னால் யார் நிற்பினும் சரி அவர்கள் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானசெயற்பாடு என்ற ரீதியில் செயற்படுகின்றனர் என்பது மட்டுமல்ல, அவர்கள் சமாதான முயற்சிகளுக்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கும் எதிராகச் செயற்படுகின்றனர் என்பதே யதார்த்தபூர்வமானதாகும்.


அத்தோடு கருணா குழுவிற்கு தற்போது சிறிலங்காப் படைத்தரப்பில் யார் ஆதரவு அளிப்பினும் அதற்கு சனாதிபதி சந்திரிகாவே பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் சிறிலங்கா முப்படைக்குமான தளபதியாக மட்டுமல்ல, தற்பொழுது சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சும் அவர் பொறுப்பிலேயே உள்ளது.

ஆகையினால் மட்டக்களப்பில் கருணா குழுமேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தனியாக அக்குழுவினர் மட்டும் காரணம் எனக்கொள்ள முடியாது. இதற்கு அனுசரணை வழங்கும் அனைவருமே பொறுப்பேற்க வேண்டும். இந்த வகையில் கருணா குழுவின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளிலும் யுத்தநிறுத்தத்திலும் ஏற்படுத்தும் பாதிப்புக்களுக்கு கருணா மட்டுமல்ல, கருணா பின்னாலுள்ள அரசதரப்பும் பொறுப்பேற்க வேண்டிவரும்.

# வாக்காளரை ஏற்றிச்சென்ற மினிபஸ் தடம்புரண்டதில் 45பேருக்குக் காயம்

## -9பேர் வவு.வைத்தியசாலையில் அனுமதி

ஓமந்தை வாக்குச்சாவடிக்கு வாக்காளர்களை ஏற்றிச் சென்ற மினிபஸ் ஒன்று புளியங்குளத் திற்கும் விளக்குவைத்த குளத் திற்குமிடையில் தடம் புரண்டதில் 45 பேர் காய மடைந்துள்ளனர்.



இதில் ஒன்பது பேர் படுகாய மடைந்த நிலையில் உடனடியாக வவுனியா வைத்தியசாலை எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

அனந்தர் புளியங்குளம் பகுதியிலிருந்து வாக்காளர்களை ஏற்றிவந்த இவ் வாகனம் காலை 8.15 மணியளவில் பாலம் அமைந்திருந்த பகுதியில் வீதியை விட்டு விலகி தடம் புரண்டது. இதன்போது மினி பஸ்பலத்த சேதமடைந்தது.

(20,லோ)

# பொடோ சட்டத்தை ஆதரித்து வாக்குப்போட்டது தவறு

## -வருத்தம் தெரிவிக்கின்றார் வைகோ

(சென்னை)

பாராளுமன்றத்தில் பொடோ சட்ட மசோதா கொண்டுவந்த போது, அதைச் சட்டமாக்க வேண்டாம் என்று வலியுறுத்தினேன். கூட்டணி தர்மத்திற்காக பொடோவை ஆதரித்து வாக்குப் போட்டது தவறுதான் என்று வைகோ வருத்தம் வெளியிட்டுள்ளார்.

வால்பாறையில் நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் ம.தி.மு.க.வேட்பாளர் கிருஸ்ணனை ஆதரித்து கட்சிப் பொதுச் செயலாளர் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வால்பாறை தேயிலை தோட்டங்களில் வாழ்க்கையைப் புதைத்துக கொண்டு வறுமையில் வாடும் தோட்டத் தொழிலாளர்களின் துயரத்தைப் பலமுறை பாராளுமன்றில் பேசியுள்ளோம். ஆனால், ஜெயலலிதா தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க முன்வராமல் முதலாளிகளுடன் சமரசம் பேசிவிட்டார்.

பாராளுமன்றத்தில் பொடோ சட்ட மசோதா கொண்டு வந்த போது அதைச்சட்டமாக்க வேண்டாம் என்று வலியுறுத்தினேன். கூட்டணி தர்மத்திற்காக பொடோவை ஆதரித்து வாக்குப்போட்டது தவறுதான அதை ஒப்புக்கொள்கின்றேன்.

பொடோ சட்டம் தவறான அரசியலுக்கு பயன்படுத்தப்படமாட்டாது என்று அத்வானியின் வாக்குறுதியை நம்பினேன். அந்த வாக்குறுதி இப்போது எங்கே போனது?

"தமிழகத்தில் பொடோசட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது. வைகோ உள்ளிட்டவர்களை தமிழக அரசு பொடோ சட்டத்தை தவறாகப் பயன்படுத்திக் கைது செய்துள்ளது.'' என்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் அனைவரும் வாதாடினர். அதற்குத் துணைப்பிரதமர் அத்வானி என்ன சொல்லப் போகின்றார்?

கடந்த 1999ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் அரசியல் சூழ்ச்சியால் வாஜ்பாய் அரசு கவிழ்ந்தது. அப்போது அத்வானி மாறனின் வீட்டுக்கு வந்து கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டும் என்று கெஞ்சினார்.

ஆனால் மாறன் உடல்நலம் குன்றி மருத்துவமனையில் இருந்த போது சென்னைவந்த அத்வானி மாறனைச் சந்தித்து உடல்நலம் விசாரிக்கவில்லை. மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டிய அரசு தன்னுடைய பாதையிலிருந்து தவறி தடம்மாறிச் செல்கின்றது. இதை மக்கள் உணரவேண்டும். இவ்வாறு வைகோ பேசினார்.

வால்பாறையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வேட்பாளர் கிருஷ்ணனை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். வைகோ பேசத் தொடங்கியதும் பலத்த மழை பெய்தது. உடனே பொதுக் கூட்ட மேடையில் கூடியிருந்தவாகள் கலைந்து செல்லாமல் கதிரைகளையே குடையாக்கி வைகோ பேச்சைக் கேட்டனர்.

# டெஸ்ட் அணித்தலைவராக மாவன்அத்தப்பத்து நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா டெஸ்ட் அணியின் தலைவராக மாவன் அத்தப்பத்து நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அனைத்துப போட்டிகளிலும் சிறிலங்கா அணி தோல்வி கண்டதால் பதவி விலகிய ஹசான்திலரட்ணவின் இடத்திற்கு அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அடுத்தமாதம் நடைபெற இருக்கும் சிம்பாவ்வே சுற்றுத் தொடரில் கலந்துகொண்டு ஒருநாள் சர்வ தேச போட்டிகளின் அணிக்காக 22 பேர் கொண்ட பயிற்சிக் குழுவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பவீசமக்டுப் இயன்டரனியல், சுனில் அந்தம்பி ஆகிய புதிய வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

# முரளி விதிகளுக்கு முரணாக பந்துவீசுகிறாரா அவுஸ். இல் 5 ஓவர் பந்துவீசி பரிசோதனை

## அறிக்கை சில தினங்களில்

பந்தை வீசி எறியும் குற்றச் சாட்டிலிருந்து விடுபடுவதற்காக அவுஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தனது வாழ்நாளில் மிகவும் முக்கியத்துவம் மிக்க பரிசோதனைக்கு உள்ளாகி இருப்பதுடன் முக்கியத்துவம் மிக்க ஐந்து ஓவர்களை பரிசோதனையாளர்கள் முன்பு வீசியுள்ளார்.

விதிகளுக்கு முரணாக பந்தை வீசி எறிகின்றார் எனும் குற்றச் சாட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் பகிரங்கப் பிரயத்தனத்தில் ஒரு பகுதியாக அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழு முன்னால் ஐந்து ஓவர்களை வீசிக் காட்டியுள்ளார்.

மேற்கு அவுஸ்திரேலி பல்கலைக்கழகத்தின் மனித நகர்வுகள் தொடர்பான ஆய்வுத்திணைகளத்தில் உயர் தொழில நுட்பக் கமிராக்களின் துணையுடன் மேற்கொள்ளப்படும் இந்தப் பரிசோதனைகள் மூலம் முத்தையா முரளிதரனின் பந்துவீச்சு சட்டத்திற்கு முரணானதா? அல்லது ஏற்புடையதா? என்று உறுதிப் படுத்தப்படவுள்ளது.

இந்த சோதனைகளின் பெறுபேறுகள் அடுத்துவரும் தினங்களில் சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப நிபுணரும் மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான றூச் எலியட் மற்றும் மேற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் டரல்போஸ்டர் ஆகியோரால் ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளார்.

இதன் அறிக்கையானது இலங்கை கிரிக்கெட்சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பார்வைக்கும் இந்த அறிக்கைஅனுப்பி வைக்கப்படவுள்ளது.



| மாவட்டம்:-திருமலை தொகுதி - சேருவில | |
|---|---|
| கட்சிகள் | வாக்குகள் |
| ஐ.ம.சு.மு | 19607 |
| ஐ.தே.முன்னணி | 10346 |
| இ.த.க | 6178 |
| சி.மு.காங் | 4647 |
| ஜா.ஹெல.உறு | 563 |
| ஈ.ம.க | 61 |
| மொத்த வாக்கு | 63161 |
| அளிக்கப்பட்ட வாக்கு | 43507 |
| செல்லுபடியானது | 41520 |

| மாவட்டம்:-கொழும்பு தொகுதி:-பொரளை | |
|---|---|
| கட்சிகள் | வாக்குகள் |
| ஐ.தே.முன்னணி | 21543 |
| ஐ.ம.சு.மு | 12484 |
| ஜா.ஹெல.உறு | 6360 |
| தே.வ.முன்னணி | 109 |
| புதிய இடதுசாரி | 89 |
| மொத்த வாக்கு | 62722 |
| பதியப்பட்டது | 42350 |
| செல்லுபடியானது | 40853 |

| மாவட்டம்:-பதுளை தொகுதி:-மகியங்கன | |
|---|---|
| கட்சிகள் | வாக்குகள் |
| ஐ.ம.சு.மு. | 27727 |
| ஐ.தே.மு.ல | 22822 |
| ஜா.ஹெ.உறு | 363 |
| ஐ.ல.மு. | 89 |
| சுயேட்சை-7 | 58 |
| மொத்த வாக்கு | 74365 |
| பதியப்பட்டது | 55633 |
| செல்லுபடியானது | 52292 |

| மாவட்டம்:-காலி தொகுதி:-பலப்பிட்டிய | |
|---|---|
| கட்சிகள் | வாக்குகள் |
| ஐ.ம.சு.மு. | 18002 |
| ஐ.தே.மு. | 14117 |
| ஜா.ஹெல.உறு | 1944 |
| ஐ.ச.பெரமுன | 40 |
| ஐ.லலித் முன்னணி | 37 |
| மொத்த வாக்கு | 48387 |
| பதியப்பட்டது | 35706 |
| செல்லுபடியானது | 34217 |

# கள்ள வாக்களிக்க முற்பட்ட சங்கரி, ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் கைது

## - சிறீல.பொலிசார் தகவல்

திருட்டுத்தனமாக வாக்களிக்க முற்பட்ட 10இற்கு மேற்பட்டோர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சிறிலங்காவின் 13வது நாடாளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்களின்போது மக்களின் ஆதரவைப் பெறாத கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு ஆதரவு சேர்க்கும் விதமாக வாக்களிக்கவே இத் திருட்டுவாக்காளர்கள் முற்பட்டதாகவும், இதில் வீ.ஆனந்தசங்கரியின் தலைமையிலான சுயேட்சைக்குழுவுக்கு ஆதரவாகவும், ஈ.பி.டி.பி. தேசவிரோதக் கும்பல்களுக்கு ஆதரவாகவும் வாக்களிக்க முற்பட்ட 10 பேரே தம்மால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் யாழ். குடாநாட்டில் உள்ள பல்வேறு வாக்குச்சாவடிகளிலும் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை திருட்டுத்தனமாக வாக்களிக்க முற்பட்ட ஈ.பி.டி.பி. தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்தவர்கள் பொது மக்களால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது,

யாழ். கொக்குவிலில் உள்ள நாமகள் வித்தியாலயம் எனும் பாடசாலையில் நிறுவப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் சென்று திருட்டுத்தனமாக வாக்களிப்பை மேற்கொள்வதற்காக ஈ.பி.டி.பி. தேசவிரோதக்கும்பலைச் சேர்ந்த சிலர், மேற்படி வாக்குச்சாவடி நிலையத்திற்கு அண்மையாக நின்று தயார்ப்படுத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை இதனைக் கண்ட அப்பகுதி மக்கள் இது சம்பந்தமாக பொலிசாரிடம் முறையிட்டும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் அப்பகுதி மக்களே அவர்களை விரட்டியடித்ததாகத் தெரியவருகிறது. வட்டுக் கோட்டை மதவடிவாக்குச் சாவடி நிலையத்திற்கு அருகில் நேற்றுக்காலை வாகனத்தில் வந்த ஈ.பி.டி.பி.யினர் கள்ள வாக்குப் போட வந்தபோது அது மோசடி என அறிந்த மக்கள் அதனைத் தடுக்க முற்பட்டதாக அப்போது மக்களை அச்சுறுத்துவதற்காக ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் தம் இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை எடுக்க முற்பட்டபோது அது தவறி கீழே விழுந்தது. அதனை எடுத்த மக்கள் பொலிசாரின் தலையீட்டால் திருப்பிக் கொடுத்துள்ளனர். தாம் துப்பாக்கி வைத்திருப்பதற்கு அனுமதி இருப்பதாகவும் கூறினார்கள். வாகனத்தில் இருந்து விழுந்த பெருந்தொகையான வாக்காளர் அட்டைகளை மக்கள் தீமூட்டி எரித்து விட்டனர். இதனால் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து அருகில் இருந்த மக்களும் ஒன்று கூடியதால் ஈ.பி.டி.பி.யினர் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர்.

இதேபோல் ஊர்காவற்றுறையில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பு நிலைய முகவர் ஒருவரை ஈ.பி.டி.பி. முன்னாள வேட்பாளர் மதனராஜ் என்பவர் கொலை செய்வேன் என மிரட்டியுள்ளார்.

இதேபோல் தீவகத்தில் ஒரு சில பகுதிகளிலும் மானிப்பாய், நல்லூரின் சில பகுதிகளிலும் ஈ.பி.டி.பி.யினர் வாகனத்தில் சென்று கள்ளவாக்கு போட்டார்கள் என மக்களால் தெரிவிக்கப்படுகிறது. இத்தேர்தலை விடுதலைப்புலிகளும் மக்களும் இணைந்து சனநாயக ரீதியான முறையில் வாக்களிப்பு நடைபெற நல்ல சூழலை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.

கொட்டைக்காடு வள்ளியம்மை பாடசாலைக்கு அருகில் ஈ.பி.டி.பி உறுப்பினர் மகேந்திரன் (முன்னாள் வலி மேற்குப் பிரதேச சபைத் தலைவர்) என்பவர் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று கைத்துப் பாக்கியைக்காட்டி மக்களை வாக்களிக்க முடியாதவாறு அச்சுறுத்தியபோது அப்பகுதி மக்கள் கற்களால் வீசி ஈ.பி.டி.பி.யினரை அவ்விடத்திலிருந்து விரட்டியடித்துள்ளனர். (33)

# தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

**திருமலை மாவட்டம்**
ஐ.ம.சு.மு-3362
தமிழரசுக்கட்சி-1892
ஐ.தே.மு.-1463
மு.காங்கிரஸ்-1450
ஜா.ஹெ.உ-88

**பதுளை மாவட்டம்**
ஐ.ம.சு.மு-9025
ஐ.தே.மு-5523
ஜா.ஹெ-உறு-654
ஜாதிக சம்பத் பெர-10

**யாழ்.மாவட்டம்**
இ.த.கட்சி-3175
ஈ.ம.ஜ.மு-420
சுயேட்சை-1-340
பு.இ.மு.-07

**இரத்தினபுரி மாவட்டம்**
ஐ.ம.சு. முன்னணி -4886
ஐ.தே. முன்னணி - 2839
ஹெலஉறுமய - 582
நவசம சமாயக்கட்சி -14

**அம்பாந்தோட்டை மாவட்டம**
ஐ.ம.சு முன்னணி - 5669
ஐ.தே.முன்னணி - 2743
ஹெல உறுமய -16
புதிய இடதுசாரிமுன்னணி - 07

**மொனறாகல மாவட்டம்**
ஐ.ம.சு முன்னணி - 4667
ஐ.தே.முன்னணி - 2521
ஜாதிகஹெல உறுமய- 168
புதிய இடது சாரிமுன்னணி -04

**மாத்தறை மாவட்டம்**
ஐ.ம.சு.மு.- 8204
ஐ.தே.மு. - 3665
ஜா.ஹெ.உறு.- 788
தே.அ.முன்னணி - 9

**கேகாலை மாவட்டம்**
ஐ.ம.சு.மு - 8894
ஐ.தே.மு - 5502
தே.ஹெ.உறு - 858
பு.இ.மு - 09

**வன்னி மாவட்டம்**
இ.த.க - 1942
ஐ.ம.சு.மு - 1132
ஐ.தே.மு - 799
ஈ.ம.ஜ.க - 104

**மாத்தளை மாவட்டம்**
ஐ.ம.சு.மு - 5093
ஐ.தே.மு - 3014
ஜா.ஹெ.உறு - 512

**புத்தளம் மாவட்டம்**
ஐ.ம.சு.மு. - 3664
ஐ.தே.மு. - 2559
ஜா.ஹெ.உ. - 440
தே.ஐ.மு. - 05

**பொலநறுவை மாவட்டம்**
ஐ.ம.சு.மு. - 3851
ஐ.தே.மு. - 2200
ஜா.ஹெ.உ - 108
ஐ.சோ.கட்சி - 03

**அநுராதபுரம் மாவட்டம்**
ஐ.ம.சு.மு. - 12536
ஐ.தே.மு. - 7387
ஜா.ஹெ.உ. - 664
ஐ.சோ.க. - 26

**திருமலை மாவட்டம்**
ஐ.ம.சு.கூ. - 5520
ஐ.தே.மு. - 2238
ஜா.ஹெ.உ. 101
சி.மு.கா - 1429
இ.த.க. - 763

**நுவரெலியா மாவட்டம்**
ஐ.ம.சு.மு - 3423
ஐ.தே.மு. - 3150
ஜா.ஹெ.உ. - 219

# ஆனைமடுவ தேர்தலை ரத்து செய்வதா? தேர்தல் ஆணையாளர் ஆலோசனை

புத்தளம் மாவட்டத்தில் ஆனைமடுவ என்ற இடத்திலும், நுவரெலியாவிலும் சில வன்முறைச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்றுள்ளது.

இப் பகுதியில் நடைபெற்ற வாக்குப்பதிவுகள் மீள்வாக்குப்பதிவு செய்யவேண்டுமா? என்பதைப் பற்றித் தீர்மானிக்க தான் சில அறிக்கைகளை எதிர்பார்த்திருப்பதாக தேர்தல் ஆணையாளரால் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தேர்தல்..

புப்பணியில் ஈடுபட்டிருந்த அவர்கள் மேலும் தெரிவிக்கையில் என்றுமில்லாதவாறு மக்கள் தேர்தலில் வாக்களிப்பது இதுவே முதல்தடைவாயாக இருக்கிறது வன்னி தேர்தல் தொகுதி மக்கள் இவ்வாறு மிகுந்த ஆர்வத்துடன் வாக்களிப்பதற்கு வருகைதந்திருக்கிறார்கள். இந்த நிலையத்தில் தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாக ஈ.பி.டி.பி.கட்சி வாக்குச் சாவடி அமைந்திருக்கும் இடத்திலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் வைத்து தமது கட்சிக்கு வாக்களிக்கும்படி மக்களை வற்புறுத்தியுள்ளதாகவும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கியுள்ளதாகவும் இருவேறுமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இத்துடன்'புளொட் 'அமைப்பின் தலைவரும் வேட்பாளருமான சித்தார்த்தன் வாக்களிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோரின் வாக்காளர் அட்டைகளைப்பறித்து அடையாள அட்டையைக்காட்டி அவை தங்களுடையது என்பதை உறுதிப்படுத்துமாறு கூறி வாக்காளர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தார் எனவும் நாம் ஒரு கண்காணிப்பு அமைப்பு என்ற வகையில் எம்மிடம் முறையிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இத்தகைய செயற்பாடுகள் நிச்சயமாகத் தேர்தல் சட்டத்திற்கு முரணானவையாகும்.

வாக்களிப்புச் சாவடியிலிருந்து 500 மீற்றர் தூரத்திற்கு துண்டுப் பிரசுரங்களையும் வழங்கமுடியாது எனவே மேற்கண்ட முறைப்பாடுகள் தொடர்பாக எனது தலைமையகத்துக்கு தெரியப்படுத்தியுள்ளோம் இத்தேர்தலில் இம்முறைப்பாடுகள் தவிர வேறு எவ்வித முறைப்பாடும் தமக்குக்கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். (லோ)

– ஓமந்தையில் தேர்தல் முறைகேடு நடந்ததாக –

# ம.ஐ.மு.வேட்பாளரின் குற்றச்சாட்டுக்கு கனேடிய கண்காணிப்பாளர் மறுப்பு

(செட்டிகுளம்)

வன்னித் தேர்தல் தொகுதியில் 62 வீதமான வாக்குகள் பாவிக்கப்பட்டு இருப்பதாக வன்னி தெரிவத்தாட்சி அதிகாரி கேகணேஷ தெரிவித்துள்ளார். வாக்களிப்புக்கள் தொடர்பாக எந்த விதமான முறை கேடுகளும் இடம்பெறவில்லை என்றும் மிகவும் சிறப்பாக நடைபெற்று இருப்பதாகவும அவர் தெரிவித்தார். வாக்கு எண்ணும் பணிகள் இரவு ஆரம்பிக்கப்பட்ட போதும் இறுதிமுடிவு தேர்தல் ஆணையாளர் வெளியிடுவார் என்றும் அவர் தெரிவித்தார். ஓமந்தைப் பகுதியில் முறைகேடு நடைபெற்றதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் சுமதிபால தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். இப்பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட கனேடிய நாட்டவரான ஜோன் எந்த விதமான முறைகேடுகளும் இடம் பெறவில்லை என்று தெரிவித்தார். (21)

## ஓமந்தை..

கும் வவுனியா வடக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்களுக்குமென அமைக்கப்பட்டிருந்த 61 வாக்குச் சாவடிகளிலும் வாக்களிப்புக்கள் ஆரம்பமாகின.

இதற்கென புளியங்குளம் பகுதியிலிருந்து மக்கள் பேருந்துகள் மூலம் மட்டும் இராணுவ சூனியப் பிரதேசத்தைக் கடந்து பொலிசாரின் தடைமுகாமைக் கடந்து ஓமந்தைக்குச் செல்ல அனுமதிக் கப்பட்டனர்.

இதனால் மந்தகதியிலேயே மக்கள் தடைமுகாமிற்கூடாகச் செல்லக்கூடியதாக இருந்தது. ஆனால் நேற்று முன்தினம் முதலே வாக்களிப்பதற்காக வந்து புளியங்குளம் பகுதியில் தங்க வைக்கப் பட்டிருந்த மக்கள் எங்கே தம்மால் வாக்களிக்க முடியாது போய்விடுமோ என அச்சமுற்று கால்நடையாகவேனும் சென்று வாக்களிக்க அனுமதி கோரினர்.

பின்னர் 8.30 மணியளவில் சூனியப் பிரதேசத்தைக் கடந்து சென்ற மக்கள் பொலிசாரின் தடையையும் தாண்டி ஓமந்தை வாக்குச் சாவடி வரையான சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரத்தைக் கால் நடையாகவே கடந்து வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாது பெண்கள், வயது முதிர்ந்தோர், அங்கவீனர்கள் கைக்குழந்தைகளை ஏந்தியவாறு தாய்மாரும் இவ்வாறு சென்று வாக்களித்தனர். ஒரே நேரத்தில் இந்த ஆறு கிலோமீற்றர் நீளமான வீதியில் மட்டுமல்ல புளியங்குளம் பகுதியிலும் மக்கள் நிறைந்து காணப்பட்டனர்.

வீதிகளில் நடந்துசெல்ல முடியாதநிலை ஏற்பட்டபோது அருகிலுள்ள வயல்வெளியூடாகவும் மக்கள் வெள்ளமாக இவர்கள் சென்றுகொண்டிருந்தனர்.

இவ்வாறு சென்ற மக்கள் எவ்வித இடையூறுமின்றி ஓமந்தை வாக்குச் சாவடிக்குச் சென்று தமக்கென அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிகளில் அமைதியான முறையில் வாக்களித்தனர்.

காலை 9மணிவரை மந்தமாக இருந்த வாக்களிப்பு 9 மணி முதல் 10.30 வரை மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றது. அவ்வேளை முல்லைமாவட்டத்தில் சுமார் 50 வீதமான மக்கள் வாக்களித்திருந்தனர். பின்னர் 3.30 மணிவரை இடம் பெற்ற வாக்களிப்பில் முல்லை.மாவட்டத்தைச் சேர்ந்த 58 வீதமான மக்கள் வாக்களித்தனர்.

ஓமந்தைக்கும் புளியங்குளத்துக்கும் இடையிலான பகுதி மிக நீண்டதூரமாக இருந்ததால் பேருந்து மூலமாக மக்களை ஏற்றிச் செல்லத் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

ஆனால் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டுகாணப் பட்டதால் அவர்களை 50 பேருந்துகள் மூலமாக ஏற்றிச்செல்ல முடியாதநிலையில் மக்கள் விரும்பி கால் நடையாகவே சென்று வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என முல்லைத் தீவுமாவட்ட அரசாங்கஅதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (லோ)

## தென்னிலங்கையில்

ஆசனங்கள் கிடைக்குமென எதிர்வுகூற முடியாதுள்ள தெனவும் சிறிலங்காதேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பிரிவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளைஅதிகாலை வரையில் வெளியாகிய வட கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கான தபால் மூல வாக்களிப்பின் பிரகாரம் ஐ.ம.சு.முன்னணி வெளியாகியுள்ள 10 தேர்தல் மாவட்டங்களில் முன்னணியில் உள்ளது. இரத்தினபுரி, அம்பாந் தோட்டை, மொனறாகலை, பதுளை, மாத்தளை, கேகாலை, மாத்தறை, புத்தளம், பொல நறுவை, அனுராதபுரம் ஆகிய பத்து தேர்தல் மாவட்ட முடிவுகளே வெளியாகியுள்ளன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.